


# 02.06.2026 செய்திகள்

## பிரதமரின் ஸ்வநிதி திட்டம்

- 2020, ஜூன் 1-ஆம் தேதி பிரதமர் ஸ்வநிதி திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது. இந்தத் திட்டத்தின் கீழ், சாலையோர வியாபாரிகளுக்கு முதல் தவணையாக ரூ.15,000, அதை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய பின்னர் இரண் டாவது தவணையாக ரூ.25,000, இந்தத் தொகையை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய பின்னர் மூன்றாவது தவணையாக ரூ.50,000 பிணையில்லா கடன் அளிக்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ், தங்கள் கடனை முறைப்படி செலுத்தும் பயனாளிகள், ரூ.30,000 வரை கடன் பெறும் வகையில் யுபிஐ-உடன் கூடிய ரூபே கடன் அட்டையும் வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை 1.12 கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையில் பிணையில்லா கடன் அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.17,800 கோடிக் கும் அதிகமான நிதி சாலையோர வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- நம்பிக்கை, கண்ணியம் மற்றும் அதிகாரமளித்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் பெரும் பங்காற்றி வரும் ஸ்வநிதி திட்டப் பயனாளிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## தொடரக் கூடாது வரதட்சிணை அவலம்

» ட்விஷா சர்மா

- உத்தரபிரதேச மாநிலம், நொய்டாவைச் சேர்ந்தவர் ட்விஷா சர்மா (33). 2012-ஆம் ஆண்டு 'மிஸ் புணே' பட்டம் வென்ற இவர், சில தெலுங்கு, ஹிந்தி படங்களிலும் நடித்துள்ளார். விளம்பர மாடலாகவும் பணியாற்றி உள்ளார்.
- மத்திய பிரதேச மாநிலம், போபாலைச் சேர்ந்த வழக்குரைஞர் சமர்த் சிங்கை கடந்த 2025-ஆம் ஆண்டு டிசம்பரில் திருமணம் செய்து கொண்டார். இவர் தனது கணவரின் வீட்டில் கடந்த மே 12-ஆம் தேதி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.
- திருமணத்தின்போதே கணவர் வீட்டார் சில லட்சம் ரூபாய் வரதட்சிணை வாங்கியதும் ட்விஷாவின் பெயரில் இருந்த ரூ.20லட்சம்மதிப்புள்ளபங்குகளைத் தங்கள் பெயர்களுக்கு மாற்றித் தர கணவர் வீட்டார் வற்புறுத்தியதும், இறந்தபோது அவரது உடலில் 6 இடங்களில் காயம் இருந்ததும் சிபிஐ விசாரணையில் தெரியவந்துள்ளது.
- ட்விஷாவின் கணவர் வழக்குரைஞர் என்பதா லும், அவரது மாமியார் கிரிபாலா சிங் போபால் மாவட்ட நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்றவர் என்பதாலும் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக ட்விஷாவின் பெற்றோர் கூறியது ஊடக வெளிச்சத்துக்கு வந்ததால், இந்த வழக்கை உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.
- புது தில்லியின் புறநகர்ப் பகுதியான கிரேட்டர் நொய்டாவைச் சேர்ந்த தீபிகா நாகர் (25) கடந்த மே 17-ஆம் தேதி உயிரிழந்தார். இவரது திருமணத்தின்போது ரூ. 11 லட் சம் ரொக்கம் ரூ. 50 லட்சம் மதிப்பிலான தங்கம், ஸ்கார்பியோ கார் கொடுத்ததாகவும், அது போதாதென்று ரூ. 51 லட்சமும் ஃபார்ச்சூனர் கார் வேண்டும் என்றும் கணவர் வீட்டார் கொடுமைப்படுத்தி தனது மகளை வீட்டின் மாடியிலிருந்து கடந்த மே 17-ஆம் தேதி தள்ளி விட்டு கொன்றுவிட்டனர் என்றும் கூறுகிறார் தீபிகாவின் தந்தை சஞ்சய் நாகர்.
- இந்த வழக்கில் தீபிகாவின் கணவர் ரிதிக் மாமனார் மனோஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என் றால், ட்விஷாவின் கணவர் சமர்த் சிங்கும், மாமியார் கிரிபாலா சிங்கும் பல நாள்களுக்குப் பிறகு அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

SURESH'

- 2015-ஆண்டில் 7,634-ஆக இருந்த வரதட்சிணை மரணங்கள் படிப்படியாக குறைந்து வருகிறது என்பது புள்ளிவிவரங்களில் இருந்து தெரியவருகிறது. இப்போதும்கூட நாளொன்றுக்கு சராசரியாக 15 பெண்கள் வரதட்சிணைக் கொடுமையால் தன்னுயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.
- தேசிய குற்ற ஆவண காப்பக (என்சி ஆர்பி) தரவுகளின்படி நாடு முழுவதும் 2024-ஆம் ஆண்டில் மட்டும் 5,737 வரதட்சிணை மரணங்கள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக, உத்தர பிரதேசத்தில் 2,038பேரும், பிகாரில் 1078 பேரும், மத்திய பிரதேசத்தில் 450 பேரும் உயிரிழந்துள்ளனர்.
- என்சிஆர்பி தரவுகளின்படி, கடந்த 2024-ஆம் ஆண்டு அதிகபட்சமாக மேற்கு வங்கத்தில் 163 படுகொலைகளும், ஒடிஸாவில் 161 படுகொலைகளும், ராஜஸ்தானில் 75 படுகொலைகளும் நிகழ்ந்துள்ளன. ஒருசில வழக்குகள் மட்டுமே ஊடக வெளிச்சம் பெறுகின்றன.
- வரதட்சிணைக் கொடுமையால் தினந் தோறும் தாக்கப்படும் பெண்கள் குறித்த தகவல்கள் வெளியே தெரிவதில்லை. பல லட்சக்கணக்கான பெண்கள் இன்னும் வரதட்சிணைக் கொடுமையையும் சித்திரவதையையும் அனுபவித்து வருகின்றனர்.
- மருமகளிடம் வரதட்சிணை கேட்பவர்கள் பெரும்பாலும் மாமியார்களே என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. வரதட்சிணை என்ற பெயரைக் கூறாமல் உங்கள் பெண்ணின் எதிர்காலத்துக்காகவே கேட்கிறோம் என்றும் தனது மகள் வர்த்தகத்தை விரிவாக்கினால் தங்கள் மகளுக்குத்தானே நல்லது என்ற வகையிலும் மாமியார்கள்தான் பேரம் பேசுகின்றனர்.
- திருமணத்தின்போது, எதிர்காலத்தில் கூடுதலாக இவ்வளவு நகை போடுகிறோம், கார் வாங்கித்தருகிறோம். வீடு கட்ட உதவுகிறோம் என்றெல்லாம் மணமகள் வீட்டார் அளிக்கும் வாக்குறுதிகளை பல நேரங்களில் கடும் நிதிச்சுமை காரணமாக நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறது. இது புகுந்த வீட்டில் வெறும் வாயை மெல்ல கிடைத்த அவலாக மாறி சொற்களாலேயே இளம் பெண்கள் சித்திரவதைக்கு உள்ளாகிறார்கள்.

## எதிர்கால இந்தியாவின் உளவியல் சவால்

- அண்மையில் வெளியான மாதிரிப் பதிவு முறை (SRS) புள்ளியியல் அறிக்கை (Sample Registration System (SRS) Statistical Report 2024) புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவின் மொத்தக் கருத்தரிப்பு விகிதம், அதாவது ஒரு பெண் தன் வாழ்நாளில் பெற்றுக் கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை அளவு தற்போது 1.9 ஆகக் குறைந்துள்ளது.
- இது மக்கள்தொகையை நிலைத்திருக்கச் செய்யத் தேவையான 2.1 என்கிற மாற்று நிலையைவிடக் குறைவு. 2014இல் 21ஆக இருந்த பிறப்பு விகிதம் 2024இல் 18.3ஆகக் குறைந்திருக்கிறது. அதே நேரம், இறப்பு விகிதம் 6.7இலிருந்து 6.4ஆக மட்டுமே குறைந்துள்ளது.
- இந்தியாவின் சராசரியான நடுத்தர வயது தற்போது 29.2 சீனாவின் சராசரி நடுத்தர வயது 40.2. பல ஐரோப்பிய நாடுகளில் இது இன்னும் அதிகம். அதே நேரத்தில் இந்தியாவில் தற்போது 15 முதல் 29 வயதுக்குள் உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 38 கோடி. இது நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 27% ஆகும். 35 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இந்தியாவின் மக்கள்தொகையில் 65%க்கும் மேல் உள்ளனர்.

» <u>மாறிவரும் மனித உறவுகள்</u>

- கருத்தரிப்பு விகிதம் குறைவதற்கு நகரமயமாக்கல், கல்வி வளர்ச்சி, குடும்பக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு, சிறிய குடும்பங்களை விரும்பும் மனநிலை போன்றவை காரணமாகின்றன. இவை அனைத்தும் வளர்ச்சியின் அறிகுறிகள் என்றாலும், குடும்பங்களின் மரபான அமைப்பையே இவை மாற்றிவருகின்றன.
- ஒரு காலத்தில் இந்தியக் குடும்பங்கள், தலைமுறை சார்ந்த உறவுகளின் மேல் கட்டப்பட்டிருந்தன. தாத்தா, பாட்டி, உறவினர்கள், பராமரிக்கும் பொறுப்பைப் பகிர்ந்துகொள்வது – இப்படியான சூழலில் குழந்தைகள் வளர்ந்தனர்.
- முதியவர்கள் குடும்பத்தின் மையமாக இருந்தனர். குடும்பம் என்பது வெறும் பொருளாதார அமைப்பாக அல்லாமல், அதீத உணர்வுகளை மேலாண்மை செய்யும் அமைப்பாக இருந்தது. இன்று, சமூக ஊடகங்கள் உருவாக்கும் செயற்கை அடையாள உலகம் உண்மையான மனித உறவுகளை மெதுவாக மாற்றிவருகிறது.
- நூற்றுக்கணக்கான இணையத் தொடர்புகள் இருந்தாலும் உணர்வுரீதியாகப் பாதுகாப்பான உறவுகள் இல்லாத தலைமுறை உருவாகிறது. நகர வாழ்க்கை, வேலைவாய்ப்புக்காக அடிக்கடி நிகழும் இடமாற்றங்கள், தனிமனித மையச் சிந்தனைகள் ஆகியவை குடும்ப அமைப்பை மேலும் சிதைத்து வருகின்றன.

- பெரும்பாலான இளைய வயதினர் சமூக வலைத்தளங்களிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதால், உணர்வுரீதியாக மிகவும் கொந்தளிப்பான மனநிலையில் இருக்கிறார்கள். அதேபோல் பல முதியவர்கள் பொருளாதார ஆதரவு கிடைத்தாலும் உணர்வுரீதியாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

» உணர்வுகளின் உருமாற்றம்

- இன்றைய இந்திய இளைஞர்களின் வாழ்க்கை முந்தைய தலைமுறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.
- கல்விப் போட்டி, வேலைவாய்ப்பு பற்றிய அச்சம், சமூக ஒப்பீடு, சமூக வலைத்தள அழுத்தம், வெற்றியை நிரூபிக்க வேண்டிய நிரந்தர மனஅழுத்தம் ஆகியவை குழந்தைகள் / இளைஞர்களின் மனநிலையைத் தீவிரமாகப் பாதிக்கின்றன.
- முன்னர் குழந்தைகள் தங்கள் பள்ளி அல்லது சமூகத்துக்குள் மட்டுமே ஒப்பிடப்பட்டனர். ஆனால் இன்று அவர்கள் உலகளாவிய அளவில் தங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.
- சொந்த வாழ்க்கையின் வெற்றிகள் குறித்த பதிவுகள் மூலம் தங்கள் கொண்டாட்ட மனநிலையை வெளிப்படுத்துகிறார்கள். அதேவேளையில், தோல்விகளைத் தாங்கும் திறன் அவர்களிடம் வளரவில்லை.
- சமூக ஊடகங்கள் உணர்வுகளை வியாபாரப் பொருளாக மாற்றிவிட்டன. எனவே, உணர்வுகளை எப்போதும் போலியாக வெளிப்படுத்தும் நிலைக்கு இளைஞர்கள் ஆளாகியிருக்கிறார்கள்.
- அதனால் கோபம், வெறுப்பு, பயம், வன்மம், அரசியல் பிரிவினை போன்ற எதிர்மறையான பண்புகள் இளைஞர்களை இலக்காக வைத்துப் பரப்பப்படுகின்றன. இதனால், இளைஞர்கள் சிந்திப்பதற்கு முன் உணர்ச்சிவசப்படும் மனநிலைக்குச் செல்கிறார்கள். இது ஆபத்தானது!

» அதிகரிக்கும் அபாயம்

- இந்தியாவில் சராசரி வாழ்நாள் தற்போது 72 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இது மருத்துவத் துறை முன்னேற்றத்தின் அடையாளம். ஆனால் நீண்ட ஆயுள் மட்டுமே மனித வாழ்வின் தரத்தை நிர்ணயிக்காது. சக மனித ஆதரவு இல்லாத முதுமை ஓர் உளவியல் நெருக்கடியை உருவாக்குகிறது.
- ஓய்வு வாழ்க்கை, சமூகப் பங்களிப்பை இழப்பது. உடல் நோய்கள், குழந்தைகள் வெளிநாடு அல்லது நகரங்களுக்கு இடம்பெயர்தல் ஆகியவை முதியோரிடம் மனச்சோர்வையும் தனிமையையும் அதிகரிக்கின்றன.
- இந்தியச் சமூகத்தில் முதியவர்கள் ஒருகாலத்தில் அறிவின் அடையாளமாக மதிக்கப்பட்டனர். ஆனால், தொழில்நுட்ப மாற்றங்களும் வேகமான கலாச்சார மாற்றங்களும் அவர்களைச் சமூகத்தின் ஓரத்துக்குத் தள்ளுகின்றன.
- மாதிரிப் பதிவு முறை அறிக்கை மேலும் ஒரு முக்கியமான விஷயத்தையும் காட்டுகிறது. இந்தியாவில் பிராந்திய / கிராம-நகர வேறுபாடுகள் இன்னும் தீவிரமாக உள்ளன.
- பல தென்னிந்திய மாநிலங்கள் சுகாதார அளவுகோல்களில் வட மாநிலங்களைவிட முன்னிலையில் உள்ளன. இந்தச் சமத்துவமின்மை வெறும் வளர்ச்சிப் பிரச்சினை அல்ல; அது உளவியல் பாதிப்புகளையும் உருவாக்குகிறது.
- பாதுகாப்பின்மை, வறுமை, சமூக அச்சம் நிறைந்த சூழலில் வாழும் மக்கள் உணர்ச்சிரீதியாக அதிகப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அத்தகைய சமூகங்கள் பயம், வெறுப்பு, அரசியல் தூண்டுதல்களுக்கு எளிதில் ஆளாகும் அபாயம் உள்ளது. எனவே, இந்தியாவின் மக்கள்தொகை மாற்றத்துக்குப் பொருளாதாரத் திட்டமிடல் மட்டுமல்ல, உளவியல் அடிப்படையிலான சமூகத் திட்டமிடலும் அவசியமாகிறது.

» என்ன செய்யலாம்?

- பள்ளிகள் தேர்வு மையங்களாக மட்டுமே இருக்கக் கூடாது. உணர்வு மேலாண்மை, மன அழுத்த மேலாண்மை, சக மனிதர்களுடனான தொடர்பு, முடிவெடுக்கும் திறன், பிரச்சினைகளைக் கையாளுதல், பாதுகாப்பான சமூக வலைத்தளப் பயன்பாடு போன்றவை கல்வியின் ஒரு பகுதியாக மாற வேண்டும்.
- குழந்தைகள் தோல்வியைச் சமாளிப்பது, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது, உறவுகளை உருவாக்குவது போன்றவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும்.
- அதேபோல் முதியவர்கள் வெறும் பராமரிக்கப்பட வேண்டியவர்களாக மட்டுமே பார்க்கப்படக் கூடாது. அவர்கள் சமூகத்தை அனுபவத்தால் வழிநடத்தும் பங்கேற்பாளராக மாற வேண்டும். அதற்கான சூழலைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டும்.
- முதியவர்கள் அனுபவத்தையும் நினைவுகளையும் தருகிறார்கள்; இளைஞர்கள் ஆற்றலையும் புதுமையையும் தருகிறார்கள்.

தலைமுறைகளைப் பிரிக்கும் சமூகங்கள் இறுதியில் இந்தத் தொடர்ச்சியை இழக்கின்றன. இது இந்தியச் சமூகம் எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான சவால்.

- மருத்துவமனைகள், வேலைவாய்ப்புகள், ஓய்வூதியத் திட்டங்கள் மட்டுமல்லாமல் பாதுகாப்பு தரும் குடும்பங்கள், மனிதநேயமான கல்வி அமைப்புகள், மனநலத்தை மதிக்கும் சமூகங்களை உருவாக்க வேண்டும். இளைஞர்களையும் முதியவர்களையும் இணைக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## சோழர் சாசனத்தில் இஸ்லாமியரின் முத்திரை

- அண்மையில் நெதர்லாந்து நாட்டுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடியிடம், சோழர் காலத்து ஆனைமங்கலம் செப்பேடுகள் லெய்டன் (Leiden) பல்கலைக்கழகத்தினரால் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.
- சர்வதேச அளவில் பெரிய லெய்டன் செப்பேடு (Larger Leiden Plates) என்று அழைக்கப்படும் 30 கிலோ எடையுள்ள இந்த வரலாற்றுப் பெட்டகம், தாயகம் திரும்புவது தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு புதிய விடியல். இதில் தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் இன்னோர் அம்சமும் இருக்கிறது.

» செப்பேட்டின் உருவாக்கம்

- பொ.ஆ. (கி.பி.) 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சோழப் பேரரசு கடல் கடந்த வணிகத்திலும் கடற்படை அதிகாரத்திலும் உச்சத்தில் இருந்தபோது இந்தச் செப்பேடுகள் உருவாக்கப்பட்டன. சைவ சமயத்தின் மீது பற்றுக்கொண்ட சோழ மன்னர்கள், சர்வதேசத் தூதரக உறவுகளைப் பேணிவந்தனர்.
- அந்தக் காலத்தில், இன்றைய இந்தோனேசியப் பகுதியான ஸ்ரீவிஜய நாட்டு அரசன் மாறவிஜயோத்துங்க வர்மன், தமிழகத்தின் முதன்மைத் துறைமுக நகரான நாகப்பட்டினத்தில் பௌத்தத் துறவிகளுக்காக ஒரு விகாரையைக் (ஆலயம்) கட்ட அனுமதி கேட்டார். அதற்குப் பெருமனதோடு அனுமதி அளித்த மாமன்னர் முதலாம் ராஜராஜ சோழன், 'சூடாமணி விகாரம்' (ராஜராஜ சோழன் பெரும்பள்ளி) என்கிற அந்த பௌத்த ஆலயத்தின் தினசரிப் பராமரிப்புக்காக, 97 வேலி பரப்பளவு கொண்ட 'ஆனைமங்கலம்' என்கிற ஒட்டுமொத்தக் கிராமத்தின் நில வருவாயையும் கொடையாக அள்ளித் தந்தார்.
- தந்தையின் மறைவுக்குப் பின், அரியணை ஏறிய அவரது மகன் முதலாம் ராஜேந்திர சோழன் இந்த வாய்மொழி ஆணையை முறைப்படுத்தி, 21 பெரிய செப்பேடுகளில் அரசாணையாகப் பொறித்து, சோழர்களின் அதிகாரபூர்வ ராஜமுத்திரையுடன் வெண்கல வளையம்பூட்டி நிரந்தர ஆவணமாக மாற்றினார்.

» கைப்பற்றிய டச்சுக்காரர்கள்

- சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாகப்பட்டினம் பகுதி டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அப்போது ஏற்பட்ட போர்கள், அரசியல் குழப்பங்களின்போது, உள்ளூர் மக்கள் இந்தச் செப்பேடுகளை நிலத்தடியில் புதைத்துப் பாதுகாத்ததாகக் கூறப்படுகிறது. அவை டச்சுக்காரர்களுக்குக் கிடைத்தன.
- பொ.ஆ. 1712 வாக்கில், நாகப்பட்டினத்தில் டச்சுப் பாதிரியாராக இருந்த புளோரெண்டியஸ் காம்பர் (Florentius Camper) இந்தச் செப்பேடுகளை நெதர்லாந்துக்கு எடுத்துச் சென்றார். பின்னர், அவரது வாரிசுகளால் 1862இல் புகழ்பெற்ற லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் ஆசியப் பிரிவிடம் (UBL -University of Leiden Library) அவை ஒப்படைக்கப்பட்டன.
- அதற்கு முன்னதாக, கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகம் செய்துவந்த புகழ்பெற்ற டச்சுக் கிழக்கிந்திய கம்பெனியின் (VOC Vereenigde Oostindische Compagni) ஆவணக் காப்பகப் பதிவுகளின் வழியேதான் வரலாற்று அறிஞர்கள் இந்தச் செப்பேட்டின் தொன்மையைக் கண்டறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

» மீட்டெடுத்த இந்தியா

- காலனிமயமாக்கக் காலத்தில் கொண்டுச் செல்லப்பட்ட இந்த வரலாற்றுச் சொத்தை மீட்பது எளிதாக இருக்கவில்லை. இந்தியா 2012 முதலே இதற்கான தூதரக முயற்சிகளை எடுத்துவந்தது.
- திருப்புமுனையாக, கடந்த 2022இல் நெதர்லாந்து அரசு, 'முறையான ஆதாரங்கள் இருந்தால் காலனிய காலத்தில் பிற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட வரலாற்றுச் சொத்துகளை, அந்தந்த நாடுகளிடமே ஒப்படைப்போம்' என்று ஒரு புதிய மீட்புக் கொள்கையை (Restitution Policy) கொண்டுவந்தது.





| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |

- யுனெஸ்கோவின் (UNESCO) மீள் அளிப்புக்கான சர்வதேசக் குழுவின் 24 ஆவது கூட்டத் தொடரில், இந்தச் செப்பேட்டின் தாயகம் இந்தியாதான் என்பது சட்டபூர்வமாக உறுதிசெய்யப்பட்டது.
- பேச்சுவார்த்தையின் பயனாக, நெதர்லாந்தின் தலைநகர் தி ஹேக் (The Hague) நகரில் நடைபெற்ற அதிகாரபூர்வ விழாவில், நெதர்லாந்து பிரதமர் ராப் ஜெட்டன் முன்னிலையில், லெய்டன் பல்கலைக்கழக வாரியம் இச்செப்பேடுகளைப் பிரதமர் மோடியிடம் ஒப்படைத்தது.

» <u>மத நல்லிணக்கம்</u>

- தமிழகத்தின் வரலாற்று ஆய்வில் புகழ்பெற்ற நூலான 'கல்வெட்டு ஓர் அறிமுகம்' என்கிற நூலின் ஆறாவது பக்கத்திலேயே, இந்தச் செப்பேடுகள் லெய்டன் நகர அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வரலாற்று விவரம் மிகத் தெளிவாகப் பதியப்பட்டுள்ளது.
- மேலும், கல்வெட்டியல் / வரலாற்று அறிஞரான புலவர் செ.இராசு தொகுத்த, 'தமிழக இசுலாமிய வரலாற்று ஆவணங்கள்' ஆய்வு நூலின் 70ஆவது பக்கத்தில் (செய்தி எண் 36), இந்தச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியின் இறுதி வரிகள் துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன: '... க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துப் பிரமதேயம் சன்னமங்கலத்துச் சபையோம் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் மத்யஸ்தன் துருக்கன் அகமுதனேன்...'
- ஒரு பௌத்த விகாரைக்கு, ஓர் இந்து (சைவ) மன்னன் கொடுத்த கொடையை, அந்த ஊரின் அரசு அதிகாரியாக (கணக்கராகவும் ஊர் நடுவராகவும்) இருந்து 'துருக்கன் அகமதன்' (அகமது) என்கிற இஸ்லாமியர் எழுதித் தன் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார்.
- இதுகுறித்துத் தமிழகத்தின் மூத்த தொல்லியல் /கல்வெட்டியல் அறிஞரான முனைவர் வெ.வேதாசலம், 'இந்தச் செப்பேடுகள் தமிழக வரலாற்றின் மிக முக்கியத் திருப்புமுனை ஆவணம்.
- சோழர் காலத்தில் நிலவிய பன்னாட்டுத் தூதரக உறவையும், எல்லாவற்றுக்கும் மேலாக உள்நாட்டில் நிலவிய மிக உன்னதமான சமய நல்லிணக்கத்தையும் இது நிரூபிக்கிறது.
- ராஜராஜ சோழன் காலத்திலேயே இஸ்லாமியர்கள் அரசின் உயரிய, நம்பகமான பதவிகளில் இருந்துள்ளனர் என்பதற்கு 'துருக்கன் அகமதன்' என்கிற பெயரே கல்வெட்டுச் சான்றாகும்' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.
- இஸ்லாமியர்கள் இந்த மண்ணுக்கு ஏதோ பிற்காலத்தில் வந்த அந்நியர்கள் அல்ல; சோழர் காலத்திலேயே, அவர்கள் இந்த மண்ணின் மைந்தர்களாக, நாட்டின் மிக முக்கிய இறையாண்மை ஆவணங்களை எழுதும் அளவுக்கு முதன்மைப் பொறுப்பில் பங்காற்றியிருக்கிறார்கள்.

## கோவையை சேர்ந்த மூத்த வழக்கறிஞர் மோகனா நேரடியாக உச்ச நீதிமன்ற நீதிபதியாகிறார்

- இதில், பஞ்சாப் – ஹரியானா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஷீல் நாகு, மும்பை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசேகர், மத்திய பிரதேச உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் சச்தேவா, ஜம்மு காஷ்மீர் லடாக் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அருண் பல்லி, தமிழகத்தைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் வி.மோகனா ஆகியோரை உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.
- இந்த பரிந்துரைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, 5 பேரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

» <u>நீதிபதி எண்ணிக்கை 37 ஆனது</u>

- புதியநீதிபதிகளுடன் சேர்ந்து, தலைமை நீதிபதி நீங்கலாக உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 37 ஆகிறது. புதி தாக நியமிக்கப்பட்ட 5 நீதிபதி களுக்கும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் இன்று பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

» <u>உச்ச நீதிமன்ற வரலாற்றில்..</u>

- உச்ச நீதிமன்ற வரலாற்றில், மூத்த வழக்கறிஞராகப் பணி வழக்கறிஞராயாற்றி நேரடியாக உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படும் 2-வது பெண் என்ற பெருமையையும், தமிழகத்தைச் சேர்ந்த முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.